

மட்டக்களப்பு


# தமிழ் ஓசை




BATTICALOA


"தரணியெங்கும் தமிழை உரக்கச் சொல்வோம் உரைக்கச் செய்வோம்"

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையின் அழுத்தங்கள்... 03

ASWA நிறுவகம் காத்தான்குடியில் ஆற்றிவரும் சமூகப் பணிகள் ஓர்பார்வை 06


02 மட்டக்களப்பில் அஹிம்சா நிறுவனத்தின் சமூகப்பணிகள்

சத்தியம் ஒருபோதும் சாவதில்லை 03




ஒலி : 01 · ஓசை : 01 · மாதாந்த வெளியீடு · பக்கம் : 08 · விலை : 50.00

தமிழ் அரசியவாதிகள் இணைந்து தார்மீக ஆதரவு வழங்க வேண்டியதை மறந்து அறிக்கைப் போரின் மூலம் ஆளுக்காள் சேறு பூசிக் கொள்வது எம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதாகாதா?









## என்று தணியுமிந்த கூட்டமைப்பின் உள் வீட்டுப் புகைச்சல்

## சமசத்துணவும் சிறுவர்களின் உடல் நலமும்



பெற்றோர்களும் பாதுகாவலர்களும் எல்லாச் சிறுவர் சிறுமிகளையும் நன்றாக வளர்த்து வரவேண்டும். சிறுவர்களின் துஸ்பிரயோகத்தையும் அவர்களை வேலைக்கு அமர்த்து வதைத் தடுப்பதற்காகவும், அவர்களின் நலன்களை பேணு வதற்காகவும் சிறுவர் பாதுகாப்புச் சட்டத்துடன் சிறுவர் நலன் பேணும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. சிறுவர்களுக்கு நல்ல சத்துணவுகளை ஊட்டி நல்ல பாதுகாப்பான சுற்றாடலில் வளர்த்து அவர்களுக்கு வேண்டிய கல்வி அறிவுடன் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்பித்து அவர்களை நல்ல பிரஜைகளாக்கும் முக்கிய பொறுப்பு அவர்களைப் பேணி வளர்ப்பவர்களுடையதாகும். ஏனெனில் ஒரு நாட்டின் எதிர்காலம் சிறுவர்களின் மேல் தங்கியுள்ளது. சிறுவர்களுடைய மன வளர்ச்சியும் ஆரோக்கியமும் அவர்கள் உட்கொள்ளும் சத்துணவில் தங்கியுள்ளது. சிறுவர்களினுடைய ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சரியான

தொடர்ச்சி 05 பக்கத்தில்

## மண்முனை வடக்கு கல்விக் கோட்டம் நடாத்திய கோட்ட மட்ட கலைவிழா

பக்கம் 08





## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஊழல் நடைபெறுவதாக



வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை

– வைத்தியசாலை நிருவாகம்.

பக்கம் 06

## ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில்

ஆகம விதிப்படியான பூஜை திருவிழாக்களுக்கு அப்பால் செய்யப்படும் சமூகப் பணிகள்

பக்கம் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுமா நகரிலிருந்து தமிழ் ஓசை...

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இன்றைய நவீனகாலமயமாக்கல் மெல்லத் தமிழை விழுங்கிக் கொண்டிருக்கின்றது. அத்தகைய நிலைக்குள் சமூகம் தன்னை அர்ப்பணித்து பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து பழையனவற்றையெல்லாம் (மறைத்து) மறந்து விட்டுள்ளது. நவீனகாலத்துக்குள் தன்னை நுழைத்து வெளிவரமுடியாமல் தவிக்கின்றது. ஆதிகாலந் தொட்டு பேணிப் பாதுகாத்து வந்த பாரம்பரிய சமூக கலை கலாச்சாரம் இருந்த இடம் தெரியாமல் சென்று கொண்டிருக்கின்றது இதனை தடுத்து நிறுத்தி எதிர்கால சமூகத்தினை நல்வழிப் படுத்தவேண்டியது அனைவரினதும் தார்மீக கடமையாகும் எல்லாவற்றையும் நீண்டகயிற்றில் செல்ல விட்டு இழுத்துப்பிடிக்கின்ற போதுதான் பல்வேறு விளைவுகளை சந்திக்க நேரிடுகிறது. இவற்றை எவ்வாறு எப்படி தடுப்பது என்று தெரியாமல் இன்றும் நாம் தடுமாறிக் கொண்டிருக்கின்றோம். ஏன் முடியாது என்று ஒரு கனம் சிந்தித்துப் பார்க்கின்றோமில்லை அவ்வாறு சிந்தித்து பார்ப்பதற்கு எப்போது முன் வருகின்றோமோ அன்று தான் எமக்கு விடிவு கிடைக்கும் எனவே எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வுக்காக நாமொரு புதுயுகம் படைப்போம் வாரீர்! நமது செம்மொழியாம் எம் தமிழ்மொழியை பாதுகாத்து எட்டுத்திக்கெங்கும் தமிழ் ஓசையுடன் ஒலிக்கச்செய்வோம்.

**தமிழ் ஓசை**
இல. 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசிஇல.: 077 328 00 33 | மின்னஞ்சல் : tamilosai7@gmail.com

**மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் மண்வாசனை தாங்கி வருகின்றது தமிழ் ஓசை**

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு எழுத்து திறனை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களும் தங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்பலாம் தாங்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்களில் பாடசாலையின் பெயர். வகுப்பு.முழுப்பெயர் என்பவற்றை குறிப்பிட்டுக்கொள்ளவேண்டும்.
அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்
தமிழ் ஓசை
இல: 184, பஸார் வீதி, மட்டக்களப்பு.

**''எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன அதுபோல் – உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.''**

## தமிழ் விருட்சத்தினூடாக மாணவர்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கி வைப்பு





திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசங்களில் வறுமைக்கோட்டின் உள்ள மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தும் நோக்கில் மாவட்டத்தில் இயங்கி வரும் தமிழ் விருட்சத்தின் இணைப்பாளர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் அவர்களினால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய பாவனைப்பொருட்கள் பண உதவி புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வினாத்தாள் என்பவற்றை இவ்வமைப்பினூடாக செய்து வருகின்றனர் இவர்களினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட உதவித் திட்டங்கள் சிலவற்றை மேலே காணலாம்.

# மட்டக்களப்பில் அஹிம்சா நிறுவனத்தின் சமூகப்பணிகள்

### ஜோசெப் வாஸ் வித்தியாலயத்துக்கு போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு




மட்டக்களப்பு கல்வி வலயத்தில் அதிகளவு வறிய மாணவர்களைக் கொண்டு இயங்கி வரும் மட்/ ஜோசெப் வாஸ் வித்தியாலயத்தின் மிக நீண்ட நாள் தேவையாகவிருந்த போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றினை, அஹிம்சா நிறுவனத்தின் கல்வி மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அதன் தலைவர் வி.விஜயராஜா பாடசாலை அதிபர் எஸ். சுதாகரனிடம் வழங்கி வைத்தார்.

போட்டோ பிரதி இயந்திரத்தினை வழங்கி வைக்கும் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவரும் அஹிம்சா நிறுவனத்தின் ஆலோசகருமான த.வசந்தராஜா, அருட்தந்தையர்கள் அலெக்ஸ்றொபேட், பிறைய்னர், அருட்சகோதரி கனிஸ்ற்றா, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

### அஹிம்சாவினால் துவிச்சக்கர வண்டி வழங்கி வைப்பு



ஏறாவூர்ப்பற்று செயலகப் பிரிவில் உள்ள பன்குடாவெளி கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தளவாய் கிராமத்தில் தாய் தந்தையரை இழந்து அம்மம்மாவின் பராமரிப்பில் வசித்துவரும் புவனேந்திரன் டிலிஜா மற்றும் புவனேந்திரன் டிலிசான் ஆகிய இரு பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக அஹிம்சாவின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.


### அஹிம்சா நிறுவனத்தினால் புத்தகப்பைகள் விநியோகம்




கல்குடா கல்வி வலயத்தில் உள்ள மதுரங்கேணிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் உள்ள மிகவும் வறிய மாணவர்கள் 45 பேருக்கான புத்தகப் பைகள் அஹிம்சா நிறுவனத்தின் தலைவர் வி. விஜயராஜாவினால் பாடசாலையில் வைத்து அப்பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையின் அழுத்தங்கள்



**உளவயது (MentalAge) காலவயது (Chronological) சமூகவயது (Social Age)என்பன கல்வியிலும் கணிப்பீட்டிலும் பல்வேறு பரிமாணங்களை ஏற்படுத்தக் கூடியன.**

**அ. சுகுமாரன்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர், மண்முனை வடக்கு.

ஜீன் பியாசே அவர்கள் சிறார்களின் அறிவுப் படிமுறை வளர்ச்சியில் 7 – 11 வயது வரையுள்ள காலப்பகுதியில் கீழ்வரும் ஆற்றல்களே மிக அதிகளவில் நிலைபெற்றிருக்குமென விளக்குகின்றார்.

- ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணங்களை ஒரே நேரத்தில் கவனம் செலுத்தும் ஆற்றல்.
- ஒத்த இயல்புகளையும், ஒவ்வாத இயல்புகளையும் கண்டறியும் ஆற்றல்.
- பொருட்களை வகைப்படுத்தும் வரிசைப்படுத்தும் ஆற்றல்
- தொடர்புகளை உருவடிவில் நியாயித்தறியும் ஆற்றல்.
- பகுத்தறிந்து தொகுத்தறிந்து நிலைப்படுத்தும் திறன்.
- உய்த்து அறிதலும் தர்க்கப்படுத்தி அறிதலும்
- ஒப்புவமை காணும் ஆற்றல்

எனினும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் தேசிய பரீட்சையில் காணப்படும் 1ம் வினாப்பத்திர வினாக்கள் "பியாசேயின்" உளத்தொழிற்பாடுகளை மீறி 12 – 15 வயதுக்குரிய நியம சிந்தனை தொழிற்பாட்டுக்கு ஏற்றதாக அமைந்து காணப்படுதல், துரதிஷ்டமான ஒரு விடயமாகுமென கல்வியலாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

இன்று இலங்கையில் கல்வியானது தரத்தை நோக்கிச் செல்வதனால் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக கடினத்தன்மை நோக்கிச் செல்ல வேண்டிய தேவையும் உண்டு. எனினும் 5ம்தர புலமைப்பரீட்சை வினாத்தாள் 1க்கான கட்டமைப்பானது "பரீட்சை பதகளிப்பையும்", அறிவுதடம் புரழ்தலையும்" ஏற்படுத்தாது இருத்தல் வேண்டும் என்பது கல்விப் பேராசிரியர்களது எச்சரிக்கையாகும்.

தற்போது 5ந் தரபுலமைப் பரீட்சையானது பெற்றோர்களது அந்தஸ்துடன் தொடர்புபட்ட விடயமாக மாறிவிட்டது. இதன் ஊடாக புதுவித பண்பாட்டு அசைவியக்கமும், சமூகத்தினுள் உட்புகுந்துள்ளது. இதனால் மாணாக்கர் மீது மறை முக அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக 5ம் வகுப்பு மாணவர்களுக்கான ஆசிரியர்கள், தமது மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களை தாமே உருவாக்காமல் வேறொருவர் தயாரிக்கும் வினாத்தாள்களை பணம் கொடுத்து அளவுக்கு அதிகமாகவே பெற்றுக் கொள்ளும் தன்மை காணப்படுவதை பெரும் "கல்விவணிகம்" எனறே குறிப்பிட முடியும் தங்களது பாடசாலையில் தங்களது வினாத்தாள்களை உருவாக்க முடியாத ஆசிரிய குழாம் உள்ளதா? என்பதையிட்டு நாம் யோசிக்க வேண்டும். பாடசாலைகளில் சிறு சிறு அலகுகளாக திறன்களாக வினாத்தாள்களை தயாரிக்க வேண்டிய பொறுப்பு அதிபர்களையும் சாரும்.

ஒரு பிள்ளை தினமும் பாடசாலைக்குச் செல்கின்றான். ரீயூசன் என்கின்ற மேலதிக வகுப்புக்களுக்கும் ஓடிஓடிச் செல்கின்றான். வீட்டிலும் கடந்த கால வினாத்தாள்கள் ,மாதிரி வினாத்தாள்களை வைத்து பிள்ளைக்கு மீட்டல் பயிற்சியும் நடைபெறுகின்றது. இது தவிர பாடசாலைகளில் பல இடங்களில் இருந்து தருவித்த மேலதிக வினாப்பத்திரங்கள் வகை, தொகையின்றி வழங்கப்படுகின்றன. மேலதிக வகுப்புக்கள் என்ற பெயரில் பாடசாலையிலும் காலை 7 மணிக்கு சமூகம் தரும் மாணவர்களை பி.ப 4.00மணி வரையும் வைத்துகற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலை காணப்படுகின்றது.

இவைகளெல்லாம் அம்மாணாக்கரின் மனவெழுச்சித் தன்மையை, அழுத்தங்களை, அளவுக்கதிகமான "மூளைக்களைப்பை ஏற்படுத்துகின்ற விடயங்களாகும். இவைகள் எதிர்பார்ப்பின் வேண்டத்தகாத எதிர்மறையான பலன்களையே கொடுக்கின்றன.



பேராசிரியர். சபா ஜெயராஜா அவர்கள் குறிப்பிடும் போது "இதேபோக்கில் 5ம் தரபுலமைப்பரிசில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுமானால், அதனைச் செவ்விதமாக செய்யத் தவறுமிடத்து இந்த நாட்டில் ஆரம்பக்கல்வியின் விளைவாக உளநல பாதிப்புக்குள்ளான சிறார்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதை கட்டுப்படுத்த முடியாதிருக்கும்" எனச் சுட்டிக் காட்டியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

எனவே, பிற்பகல் வரை தொடராக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் பாடசாலைகள் கட்டாயம் இரு தடைவ மாணவர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டிய கடப்பாடு அவசியமானதாகும்.

ஆரம்பக் கல்வியின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது, விளையாட்டு, செயற்பாட்டு வேலை எழுத்து வேலை ஆகியவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டதாகும். ஆனால் துரதிஷ்டம் 5ம் தரத்திற்கு வருகின்ற போது அங்கு முழுக்க "இருந்து எழுதும்" செயன்முறை மாத்திரமே நடைபெறுகின்றது. இதுகல்விக் கொள்கையை முழுமையாக விழுங்கி விடுகின்ற ஒரு முறையாகும்.

அதிகமான பெற்றோர் தமது அந்தஸ்தின் குறியீடாக தமது மழலைகளின் உடல், உள, மிகைச் சுரண்டலின்" வெளிப்பாடாக 5ம் தரசித்தியை கையாள்கின்றனர். பரீட்சையின் முக்கியத்துவம், தீவிரம் முதலியவற்றினால் பெற்றோரும் பாடசாலைகளும் அதிகபட்ச சுமையை

தொடர்ச்சி பக்கம் 07இல்....



## சத்தியம் ஒருபோதும் சாவதில்லை

அடுத்தவர்கள்
அழக்கூடாது என்பதற்காக
நீதியை
நிலை நாட்டத் துடிப்பவன் நீ..

நீ அழுதபோது
கொஞ்ச நேரம்
நீதி தேவனே நிலைகுலைந்து போனான்
நாங்களும்தான்.

நீதியைக் காக்க
ஒரு ஜீவன் சமாதியாகியிருக்கிறான்
உனக்காக...

பாதி உயிர் போனது போல் - நீ
பதறியழுததை பார்க்க முடியவில்லை.

உன்னை
கொலை செய்வதற்காக
கோடாரிக் காம்புகள் விலைபோய் இருக்கிறார்கள்
என்பதை மாத்திரம்
எங்களால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

எப்படி மனசு வந்தது
இந்த இளஞ்செழியனை இல்லா தொழிப்பதற்கு..
நீதியை
பாதியில் கொன்று விடலாமா..?

அணிவது
கறுப்பு கோட்டென்றாலும்
நீ
வெள்ளை மனசோடுதான்
விசாரணை செய்வாய் என்பார்கள்..

சத்தியம்
தோற்றுவிடக் கூடாதென்று
வித்தியா வழக்கைக்கூட
வித்தியாசமாய் விசாரித்தவன் நீ..

உன்
வழக்குத் தீர்ப்புகளை வாசித்திருக்கிறேன்
அதில்
நேர்மையும் வாய்மையும்
நிறையவே சேர்ந்திருப்பதை உணர முடிந்தது.

நடு ராத்திரியில் ஒரு பெண்
தனித்து
நம்பிக்கையோடு வருவதை
காணவேண்டுமென்று கனவு கண்டவன் நீ..
காந்தியைப் போல..




கவலைப்படாதே..
உன் கனவுகள் நனவாகும் வரை
நீதியும் நீயும் நிலைத்திருக்க வேண்டும்

**மதியன்பன்**

"இளமையில் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வையும் முதுமையில் சோகத்தைத் துடைக்கும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியுமிந்த

# கூட்டமைப்பின் உள் வீட்டுப் புகைச்சல்

கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் பங்காளிக் கட்சிகளிடையே அடிக்கடி நிகழும் பனிப்போர்கள் ஒன்றும் சிதம்பர ரகசியல்ல. ஆனால் அண்மைக் காலமாக உரசலாக இருந்த அந்தப் புகைச்சல் கொஞ்சங் கொஞ்சமாக தீப்பற்றத் தொடங்கியிருப்பதைக் காணலாம். கூட்டமைப்பின் தலைமையைப் பற்றிய சூடான விமர்சனங்களும், காட்டமான அறிக்கைகளும் அடிக்கடி வெளி வருவதைக் காணலாம். இந்த நிலை தொடர்ந்தால் அது கூட்டமைப்பின் அத்திவாரத்தையே அசைத்து, கூட்டமைப்பு எந்த நோக்கத்துக்காக உருவாக்கப் பட்டதோ, அந்த நோக்கத்தையே அர்த்தமில்லாமல் செய்து விடுமோ என, கூட்டமைப்புக்கு வாக்களித்து அதனை வாழ்வித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் ஏக்கத்துடன் நோக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு' என்று மகாகவி பாரதியின் மகாவாக்கியத்தை நம்பியே பெருமளவு தமிழ் மக்கள் தொடர்ந்தும் கூட்டமைப்புக்கு வாக்களித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். தமிழ் மக்களுடைய அபிலாசைகளை ஒருமித்த குரலில் அரசுக்கும், உலகுக்கும் தெரியப்படுத்தவும் நாங்கள் ஒருமித்த குரலில் அரசுக்கும், உலகுக்கும் தெரியப்படுத்தவும், நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதை மற்றவர்களுக்கு நிரூபிக்கவும்: நாங்கள் பிளவுபட்டு நின்றால் எங்களை வீழ்த்த நினைப்பவர்களுக்கு அது இலகுவாகி விடும் என்பதை உணர்ந்துமே: தாங்க முடியாத சுமைகளுக்கு மத்தியிலும், வலிகளுக்கு மத்தியிலும் தமிழ் தேசியத்தை மக்கள் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றி வருகிறார்கள் என்பதே உண்மையாகும். அதை விடுத்து தனிப்பட்டவர்களின் செல்வாக்குக்காக, கொள்கைகளுக்காக அவர்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்த்தால் அது அவர்களின் அறிவீனமாகும்.

யாரையாவது நிலை நிறுத்த வேண்டும் என்பதோ, யாரையாவது சாட வேண்டும் என்பதோ இக் கட்டுரையின் நோக்கமல்ல. யதார்த்தம் என்பது என்ன என்பதை உணர்ந்து, தமிழ் மக்களுடைய பலம் சிதறடிக்கப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கமே இப்பத்தியின் நோக்கமாகும். கூட்டமைப்பின் தலைமைமீது பரவலாக முன் வைக்கப்படும் முக்கிய குற்றச் சாட்டுக்களாவன

- தேர்தலின் போது நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியமை
- தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து போதிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதில்லை
- கூட்டமைப்புத் தலைவர் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைக் காக்க மென்போக்காக நடந்து கொள்கிறார்.
- மற்றவர்களின் வேண்டு கோள்களை, ஆலோசனை களைப் புறக்கணித்து பாரபட்சமாக செயல்படுகிறார்.

இவ்வாறு பல்வேறு குற்றச் சாட்டுக்கள் வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் சுமத்தப்படுகின்றன. இந்த இடத்தில் இக்குற்றச் சாட்டுக்களின் உண்மைத் தன்மை குறித்து சற்று உரசிப்பார்க்க வேண்டிய தேவையுள்ளது. தேர்தல் காலத்தில் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய தேவை அதுவும் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவிக்க வேண்டிய தேவை அதுவும் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவிக்க வேண்டிய தேவை ஏன்? ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள, கடந்து சென்ற சூழ் நிலைகளைச் சற்று மீட்டுப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. போருக்குப் பின்னரான மஹிந்த ஆட்சியில் தமிழ் மக்களின் அன்றைய அத்தியாவசியமான தேவைகளான புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், காணிவிடுவிப்பு, கைதிகளின் விடுதலை, கல்வி, பொருளாதாரம், பாதுகாப்பு போன்றவற்றில் காணப்பட்ட தேக்க நிலையும், வெற்றிக் கொண்டாட்டங்களை ஆரவாரமாக முன்னெடுத்து "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல" நொந்த மனங்களை மேலும் நோகடித்த செயல்களும், நல்லிணக்க செயற்பாடுகளில் காட்டிய அலட்சியப் போக்கும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக வழங்கப்பட்ட எகத்தாளமான பதில்களும் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தை தமிழ் மக்கள் மத்தியில் விதைத்திருந்தன. முஸ்லிம் மக்கள் தொடர்பாக கடந்த ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட பல கெடுபிடிகள் அம் மக்கள் மத்தியிலும் அத்தேவையை ஏற்படுத்தி இருந்தன. சிங்கள வாக்காளர்கள் மத்தியிலும் கடந்த ஆட்சிபற்றிய வெறுப்பு இருந்த போதிலும், யுத்த வெற்றி குறித்த பெருமிதம் அதனை சமப்படுத்துவதாக அமைந்திருந்தது. இந்த நிலையில் அப்போது எதிர்த் தரப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங் கொடுத்த இன்றைய நல்லாட்சி அரசின் தலைவர்கள், தமிழர் தரப்போடு ஏற்படுத்தும் எவ்விதமான கூட்டும், சிங்கள மக்கள் மத்தியில் இனவாதப் பரப்புரைகளை மேற் கொண்டு எதிர்தரப்பைப் பலவீனப்படுத்த மஹிந்த தரப்புக்கு சாதகமாகிவிடும் என்பதால், ஒப்பந்தங்களை மேற்கொள்ளத் தயங்கினர். நிலைமையைப் புரிந்து கொண்டு கூட்டமைப்புத் தலைமையும் அன்றைய தேவையின் முக்கியத்துவம் காரணமாக நம்பிக்கையின் அடிப்படையில் அந்த முடிவுக்கு வரவேண்டியிருந்தது. என்பதே உண்மையாகும்.

இரண்டாவது குற்றச்சாட்டான அழுத்தம் பிரயோகிக்கவில்லை என்பதை எடுத்துக் கொண்டால், எந்த அளவு கோலை வைத்து இதனைத் தீர்மானிக்க முடியும் என்பது கேள்விக் குறியாகும். தமிழர்தரப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய அந்தஸ்து தமிழர் தரப்புக்கு இருக்கிறதா? கேட்டுப்பெறவேண்டிய

மன்னனூர் மதுரா

நிலையில்தானே இருக்கிறது கேட்பவர் கேட்டாலும், கொடுப்பவர் கொடுத்தால்தானே பெறமுடியும் அதற்காக அவர்கள் கேட்கவில்லை என்று பொருள் கொள்ள முடியுமா? அவர்களும் தட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கதவுதான் திறந்த பாடில்லை. கட்சி அரசியலை முதன்மைப் படுத்தும் கடுமையான அரசியல் கலாசாரத்துடன் கட்டுண்டு கிடக்கும் பேரின அரசியல் கட்சிகளின் நெகிழ்த்தப்படாத அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு இடையிலும், இலங்கை அரசாங்கத்தை தமது கட்டுக்குள் வைத்திருக்க தமிழர் பிரச்சினையை ஆயுதமாகப் பயன்படுத்தி, மட்டுப் படுத்தப்பட்ட அளவில் அழுத்தங்களைப் பிரயோகிக்க விளையும் உலக நாடுகளின் அரசியல் நலன் சார்ந்த நிகழ்ச்சி நிரலுக்கு இடையிலுமேயே, தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டிய அசாதார ணமான பணியில் கூட்டமைப்புத் தலைமை ஈடுபட்டிருக் கிறது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். இந்த இடத்தில் எவர் இருந்தாலும் அது சவாலுக்குரிய பணி என்பதனை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

கண்டதுடைப்புக்காக ஒரு சில மாற்றங்கள் நடந் திருந்தாலும், தமிழ் மக்களின் முக்கியமான கோரிக்கைகள், எதிர்பார்ப்புகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் என்ன பயன் என்று கேட்டால், இங்கும் ஒரு சங்கடமிருக்கிறது. எடுத்தேன் கவிழ்த்தேன் என இதில் செயற்பட முடியாது. ஏனென் றால் இதில் மூன்றாந் தரப்பாக உலக நாடுகள் பலவும் சம்பந்தப் பட்டிருக்கின்றன. அவற்றின் அபிப் பிராயங்களையும் மதித்து செயற்பட வேண்டிய தேவை கூட்டமைப்புத் தலைமைக்கு இருக்கிறது. இல்லையென்றால் "நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு" என்பது போல அவர்கள் ஒத்துழைக்கிறார்கள் இல்லை என அரசாங்கம் தப்பித்துக் கொள்ள சந்தர்ப்பமளிப்பதாகிவிடும். இவ்வளது நடந்ததற்குப் பின்னும் கடந்த ஆட்சியாளர்களும் "முழுப்பூசணிக் காயை சோற்றில் மறைப்பது போல" இதே பல்லவியை இன்றும் பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த இடத்தில் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மென் போக்கைக் கடைப் பிடிக்கிறார் என்பது ஒரு சாராரின் குற்றச் சாட்டு. எதிர்க் கட்சித் தலைவர் பதவி அவர் கேட்டுப் பெற்றதல்ல. கொடுக்கப்பட்டது. அதிலுள்ள சலுகைகளுக்காக அப் பதிவியைத் தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறார் எனக் குற்றஞ் சாட்டுபவர்கள், அதற்கு இன்னுமொரு பக்கமும் இருக்கிறது என்பதை எளிதில் மறந்து விடுகிறார்கள். அப் பதவியின் அந்தஸ்து காரணமாக நாட்டுக்குள் வரும் அயல் நாட்டுத் தலைவர்கள், ராஜதந்திரிகள் கட்டாயம் இவரையும் சந்திக்கிறார்கள். அதன் போது தான் சார்ந்த மக்களின் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட இலகுவாக சந்தர்ப்பம் கிடைக்கிறது. வெளிநாட்டுத் தலைவர்களுடன் சுதந்திரமாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. இதனால் இதுவரை சாதித்தது என்ன என்று கேட்கலாம். அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரக் கூடுமல்லவா. மற்றவர்களின் கருத்தக்களை, ஆலோசனைகளைக் கேட்காமல் பாரபட்சமாக நடக்கிறார் என்பது இன்னுமோர் குற்றச்சாட்டு. பல கட்சிகள் இணைந்த கூட்டுத் தலைமைகளுக்கு இருக்கும் வழமையான தலைவலிதான், இது என்பதை மனங்கொள்ள வேண்டும். "ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்".


இப்படி எல்லாம் சொல்வதால் கூட்டமைப்புத் தலைமை கேள்வி கேட்காமலே கொண்டாடப் படவேண்டியது என்ற அர்த்தம் அல்ல "விமர்சனம் என்பது இளம் பயிரின் வேர்களைச் சீராட்டும் மழைத் தூறலாக இருக்க வேண்டும். அதன் வேர்களைக் கிளறி எறியும் அடைமழையாகி விடக்கூடாது" என்ற அறிஞர் ஒருவரின் வார்த்தைகளுக்கிணங்க தலைமை பற்றி விமர்சனம் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பாற்பட்டு அதனை நெறிப்படுத்தம் நல்ல நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்கள் உள்ளேயே பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கான அல்லது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பங்களிருக்க, பகிரங்க அறிக்கைகள் மூலம் சாடிக்கொள்வது, தங்களது பிரச்சினைகள் தீர்க்கப் படாததால் விரக்தியுற்றிருக்கும் மக்களை நம்பிக்கையீனத்துக்குள்ளாக்கி எமது பலத்தை சிதறடித்து விடும் என்பதை மறந்து விடக்கூடாது. தமிழர்களின் ஒற்றுமை சிதறடிக்கப்பட வேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கு இது இனிப்பான செய்தியாகி விடும். மேலும் தங்கள் ஒற்றுமையைக் கைவிட்டு சிதறிப் போனதால் பலமிழந்து நிற்கும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் நிலைமையையும் நாம் இவ்விடத்தில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்கள் போராட்டங்கள் வலுவடைந்துள்ள இக்கால கட்டத்தில் தமிழ் அரசியவாதிகள் இணைந்து தார்மீக ஆதரவு வழங்க வேண்டியதை மறந்து அறிக்கைப் போரின் மூலம் ஆளுக்காள் சேறு பூசிக் கொள்வது எம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதாகாதா? எனவே ஒற்றுமையே பலம் அனைவருக்கும் நலம் என்பதை மனங்கொண்டு செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

• • •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசத்துணவும் சிறுவர்களின் உடல் நலமும்





வைத்திய கலாநிதி மு.தவராசா

## BALANCED DIET & CHILDEN'S HEALTH

... அளவுகளிலுள்ள புரதம் கொழுப்பு மாச்சத்துகளுடன் செறிந்துள்ள முக்கியமான கனியுப்புகளும், உயிர் சத்துக்களும் (விற்றமின்கள்) சேர்ந்த சமசத்துணவுகளைக் கொடுப்பது மிக முக்கியமானதாகும்.

ஒருவருடைய வாழ்க்கையில் அனுபவிக்கும் சந்தோசங்களில் ஒன்று சுவையான உணவுகளை உண்பதென்பது எல்லோருக்கும் தெரியும் இது சிறுவர்களுக்கு முக்கியமானது. எனவே சிறுவர்களுடைய பாதுகாவலர்கள் இதை நினைவில் வைத்து சிறுவர்களுக்கு விரும்பிய சத்தான உணவுகளைப் பரிமாறினால் அவர்கள் விரும்பி உண்பார்கள்.

### உணவும் அதன் சத்தும்

1. மாச்சத்து (CARBOHYDRATE) உடம்பிற்கு அநேகமான சக்தியைக் கொடுக்கின்றது.
   மாச்சத்துணவுகள் : தானியங்கள், கிழங்குகள், பழங்கள், மரக்கறிகள், ரவை.
2. புரதச்சத்து (PROTEIN) உடம்பின் வளர்ச்சிக்கு முக்கியமானது.
   புரதச்சத்துணவுகள் : பசுப்பால் மற்றும் பாலுணவுகள், முட்டை, மீன், இறைச்சி, கடலை, பருப்பு வகைகள், ரவை, விதைகள் (Nuts)
3. கொழுப்புச்சத்து (FAT) உடம்பிற்கு ஓரளவு சக்தியையும் கொடுத்து அதன் வளர்ச்சிக்கும் ஏதுவாகவுள்ளது. கொழுப்புள்ள உணவுகள் பசுப்பால், பாலுணவுகள், முட்டை, இறைச்சி, சமையல் எண்ணை, எள்ளு, விதைகள்
4. விற்றமின்களும் (VITAMINS) கனியுப்புக்களும் (MINERALS) மாச்சத்து, புரதம் கொழுப்பு போன்றவற்றின் தொழில் பாட்டிற்கும் உடம்பின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும் முக்கியமானதாகவுள்ளன.
   இவை இரண்டும் செறிந்த உணவுகள் : பழங்கள், மரக்கறிகள், பால் பாலுணவுகள், முட்டை, இறைச்சி, மீன்

உடம்பிற்குத் தேவையான சரியான அளவிலுள்ள சத்துணவுகள் 3 சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



50% மாச்சத்து
30% புரதம்
20% கொழுப்பு

### உணவு வகைகள்

1. பச்சைநிற இலை வகைகள் :
   கீரை, வல்லாரை, பொன்னாங்கன்னி, அகத்தியிலை, முருங்கையிலை, பசளி, தூதுவளை, லீக்ஸ்
2. மரக்கறிகள் :
   கத்தரிக்காய், வெண்டிக்காய், பயற்றங்காய், முருங்கைக்காய், வாழைக்காய், பூசணிக்காய், தக்காளிக்காய் / பழம்
3. கிழங்கு வகைகள் :
   உருளைக் கிழங்கு, வத்தாளங்கிழங்கு, கரட், பீற்றூட், மரவள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு, முள்ளங்கி,
4. கடலை பருப்பு வகைகள் :
   மைசூர்பருப்பு, துவரம்பருப்பு, சோயா, கடலை பயறு, உழுந்து
5. கார மரக்கறிகள் :
   பச்சை மிளகாய், செத்தல் மிளகாய், வெங்காயம், மிளகு இஞ்சி, வெள்ளைப்பூடு (உள்ளி) கொத்தமல்லி, கறுவா கராம்பு, கறிவேப்பிலை, மஞ்சள்
6. பழங்கள் :
   வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், பப்பாசிப்பழம், அன்னாசிப்பழம், அப்பிள்பழம், முந்திரிகைப் பழம், பேரீச்சம்பழம், விளாம்பழம்
7. தானியங்கள் :
   அரிசி, கோதுமை, ஓற்ஸ் எள்ளு, ரவை, குரக்கன்
8. பால் வகைகள் :
   பசுப்பால், ஆட்டுப்பால், தேங்காய்ப்பால், சோயாப் பால்
9. முட்டை :
   கோழி முட்டை
10. கடல் உணவுகள் :
    மீன்வகைகள், நண்டு, இறால் கணவாய் போன்றவை ஒவ்வாமையைக் கொடுக்கும்.
11. இறைச்சி வகைகள் :
    கோழிஇறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றிஇறைச்சி போன்றவை உடம்புக்கு தகாத கொழுப்புடையவை
12. விதைகள் (Nuts) :
    நிலக்கடலை (கச்சான்) முந்திரிகைக் கொட்டை
13. தேயிலை, கோப்பி பாலுடன் அருந்தலாம்.



### உணவு அட்டவணை

A காலை உணவு வகைகள்

1. பிரதான உணவுகள் :
பிட்டு, பாண், இடியப்பம், இட்லி, தோசை, பால், சாதம், பயறு துவையல், ரவை, உப்புமா, ஓற்ஸ்கஞ்சி
2. பொருத்தமான சம்பல் மரக்கறிகளுடன் பரிமாறல், பருப்பு, உருளைக்கிழங்கு, சோயா,பல மரக்கறிகள் சேர்ந்த சாம்பார்கறி
3. பாணும் ஜாம் மாஜரினும் கொடுக்கலாம்.

B. மதிய உணவு வகைகள்

1. சிவப்பு புளுங்கல் அரிசிச்சோறு உடம்புக்கு நல்லது அல்லது சம்பா அரிசிச் சோறு
2. பால் மரக்கறிகள் : பருப்பு, கத்தரிக்காய், பூசணிக்காய், வெண்டிக்காய், கரட், பீற்றூட், போஞ்சி முருங்கைக்காய்
3. மிளகாய் தூள் சேர்ந்த கார மரக்கறிகள் கத்தரிக்கய், சோயா, உருளைக் கிழங்கு பயற்றங்காய் கரணைக் கிழங்கு, சாம்பார் கறி, முருங்கைக்காய்
4. பச்சையிலை மரக்கறிகள் கீரை, வல்லாரை, பொன்னாங்கன்னி, முருங்கையிலை
5. தயிர்
6. மாமிச உணவுகள் முட்டை, மீன், இறைச்சி
7. பழங்கள் அல்லது இனிப்பு உணவு

C இராச்சாப்பாட்டு வகைகள்

1. பிரதான உணவுகள்
இடியப்பம், இட்லி, தோசை, பாண், ரொட்டி, பல மரக்கறிகளுடன் சேர்ந்த நூடில்ஸ், ரவை, உப்புமா, பிட்டு
2. பொருத்தமான சம்பல் மரக்கறிகளுடன் பரிமாறல் பருப்பு, உருளைக்கிழங்கு, சோயா, பல மரக்கறிகளுடன் சேர்ந்த சாம்பார்கறி
3. பழங்கள் அல்லது இனிப்புணவு
4. இனிப்புணவு (Dessert) வகைகள்
பாயாசம், தயிர் கித்துள் பாணியுடன், வட்டலப்பம் பஞ்சாமிர்தம் கேக் ஐஸ்கிறீம் சூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உணவு பரிமாறும் அறிவுரைகள்

ஒவ்வொரு பருவ காலங்களிலும் பெறக்கூடிய சத்தான மரக்கறிகளையும் பழங்களையும் வாங்கி அதற்கேற்ப உணவுகளைப் பரிமாறினால் நல்லது. இதனால் செலவையும் குறைத்துக் கொள்ளலாம். பிள்ளைகள் விரும்பினால் வசதிக்கேற்ப மாமிச உணவுகளையும் சமைத்துக் கொடுப்பது நன்று.

சிவப்பு புளுங்கல் அரிசியில் சோறு சமைத்துக் கொடுத்தால் உடம்புக்கு நல்லது ஏனெனில் இதில் தேவையான விற்றமின் பீ சத்துக்கள் அதிகளவில் உள்ளன.

சைவ உணவு உண்பவர்களுக்குக் கிரமமாக சோறுடன் சேர்த்துப் பருப்புக்கறியும் மேலும் 2 சத்தான மரக்கறிகளும் கொடுத்தால் உடம்புக்கு நல்லது. இவர்களுக்கு 2 அல்லது 3 மரக்கறிகளுடன் பருப்பும் சேர்ந்த சாம்பாருடன் ஒரு பச்சையிலைக் கறியையும் சோறுடன் கொடுப்பது ஒரு மாற்றமாக அமையும் பருப்புக்குப் பதிலாக சோயா கறியையும் கொடுக்கலாம். சோறுடன் மாமிச உணவு உண்பவர்களுக்கு மேலும் 2 மரக்கறிகளைப் பரிமாறினால் உடம்புக்கு நல்லது.

நிறங்களால் வேறுபட்ட மரக்கறிகளை ஒவ்வொரு நாளும் தேர்ந்தெடுத்துச் சமைத்துச் சாப்பிட்டால் சுவையாகவும் சத்தாகவும் இருக்கும்.

மஞ்சள், இஞ்சி, உள்ளி, மிளகு, கொத்தமல்லி, வெந்தயம், கறிவேப்பிலை போன்றவை சிறந்த மருத்துவ சத்துக்களை கொண்டுள்ளதால் இவற்றை வழக்கமாக கறிகளில் சேர்க்கப்படுகின்றது.

இஞ்சியை கறிகளிலும் சாம்பாரிலும் சேர்ப்பதால் ஒரு நல்ல ருசியையும் மணத்தையும் கொடுப்பது மட்டும் அல்லாமல் இது அஜீரணத்திற்கும் உடல் நலத்திற்கும் ஒரு நல்ல மருந்தாகும்.

சோறுடன் சேர்த்து தயிர் சாப்பிடுவதும் நல்லது ஏனெனில் தயிரிலுள்ள லக்ரோ பசிலஸ் குடலிலுள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கின்றது.

இயலுமானால் ஒரு நாளைக்கு ஒருமுறையாவது பழங்களும் பச்சையிலை மரக்கறியும் எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுத்து வந்தால் நல்லது.

பிள்ளைகளுக்கு விசேட உணவுகள் பரிமாறும் நாட்களில் இனிப்புணவும் சூப்பும் கொடுத்தால் நல்லது.

### சத்துக்குறைவால் ஏற்படும் நோய்கள்.

சத்துக்குறைவான சீரற்ற உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சத்துக்குறைவு நோய்கள் ஏற்படலாம். இதனால் உடம்பு பலவீனமடைந்து கிருமி எதிர்ப்பு சக்தி இழந்து நோய்வாய்ப்படைந்து வருந்தவேண்டிவரும்.

1. விற்றமின் A (Vitamin) சத்துக்குறைபாடு
இவர்களுக்குத் தொடக்கத்தில் பார்வை மங்கல் ஏற்படும் இறுதியில் பார்வையை இழக்கலாம். தோல் காய்தலும் இலகுவில் கிருமிகளால் தொற்றுநோய்களும் ஏற்படலாம்.
சத்துணவுகள் : கரட், மீன் எண்ணைக் குளிசை
2. தயமின் (Thiamine) விற்றமின் பீ1 சத்துக்குறைபாடு பெரி பெரி (Beri Beri)
இவர்களுக்கு இருதயச்செயலிழப்பு, உடம்புப் பலவீனம்,

தொடர்ச்சி பக்கம் 07இல்....

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஊழல் நடைபெறுவதாக

## வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை

### வைத்தியசாலை நிருவாகம்.

மட்.போதனா வைத்தியசாலையில் ஊழல் நடைபெறுவதாக அண்மையில் வெளியான செய்தி தொடர்பாக மட். போதனா வைத்தியசாலை நிருவாகத்தினர் வழங்கிய தகவல்கள்.

- கங்கா -




**புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் உள்ள கதிரியக்க (RADIOTHERAPY) சிகிச்சைப் பிரிவு**

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் உள்ள கதிரியக்க (Radiotherapy) சிகிச்சையை Linear accelerator (Model Electa dual energy) என்ற இயந்திரம் மூலமாக நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்கவேண்டுமாக இருந்தால் நோய் இருக்கின்ற இடத்தினைக் கண்டுபிடிப்பதற்கான CT Simulator என்ற இயந்திரமும் தேவையாக இருக்கின்றது குறித்த இயந்திரத்தினை பெறுவதற்காக சுகாதார அமைச்சுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது விரைவில் வழங்குவதாக அமைச்சர் கூறியுள்ளாா.

கடந்த அரசாங்கம் பல வைத்தியசாலைகளுக்கு இந்த Linear accelerator இயந்திரங்களை அவசர அவசரமாக கொள்வனவு செய்து வழங்கி இருந்ததும் பின்னர் அவற்றில் ஊழல் நடைபெற்றிருப்பதாக தெரிவித்து விசாரணை நடைபெறுவதாலும் குறித்த இயந்திரத்துடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதில் சுகாதார அமைச்சுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

குறித்த இயந்திரம் கொள்வனவு தொடர்பாகவோ அல்லது அதன் தொழிற்பாடு தொடர்பாகவோ வைத்தியசாலை நிருவாகம் ஒன்றுமே செய்ய முடியாது இதில் சுகாதார அமைச்சே பொறுப்பாக உள்ளது.

**CENTRAL AIR CONDITION SYSTEM**

கடந்த 2009ம் ஆண்டளவில் மத்திய குளிரூட்டல் அமைப்பு முறையை நிறுவியயை நிறுவியபோது அதற்கான பராமரிப்புக்கும் குறித்த குளிரூட்டல் இயந்திரத்தினை வழங்கிய நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு செய்யாது உள்ளூர் பராமரிப்பாளர்களின் திறனற்ற பராமரிப்பினால் குறித்த இயந்திரம் பழுதடைந்துள்ளது இந்த நிலையில் அண்மையில் குறித்த குளிரூட்டல் அமைப்பு முறையை நிறுவிய நிறுவனம் அதன் தன்மை தொடர்பாக இங்கு வந்து ஆராய்ந்துள்ளது சில பகுதிகளை திருத்தி தங்களுடன் பராமரிப்பு ஒப்பந்தம் செய்யும் பட்சத்தில் குளிரூட்டல் அமைப்பு முறையானது திறம்பட இயங்கும் எனவும் தெரிவித்துள்ளனர். குறித்த செயற்பாட்டிற்கு தற்போதுள்ள நிருவாகத்தினை குறைகூறுவதில் பயனில்லை.

**இந்திய அரசினால் வழங்கப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடம்.**

குறித்த சத்திரசிகிச்சைக் கூடம் அமைப்பது தொடர்பாக வைத்தியசாலை நிருவாகமோ அல்லது மாவட்ட செயலகமோ எந்த விதமான செய்பாடுகளையுமே செய்ய முடியாது சகல விடயங்களும் இந்திய தூதரகத்தினாலும் சுகாதார அமைச்சினாலுமேதான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன குறித்த வேலைத் திட்டம் தொடர்பாக என்ன நடைபெறுகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்கு மாத்திரமே வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் பிரதி அனுப்பப்படுகின்றது.

முதலாவதாக குறித்த சத்திரசிகிச்சைக் கூடம் அமைப்பது தொடர்பாக கடந்த 2015.12.17ம் திகதி பி.பகல் 3.32 மணிக்கு இந்திய தூதரகத்தில் இருந்து மின்னஞ்சல் ஒன்று சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அதன் பிரதி வைத்தியசாலைப் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. 23.12.2015ம் திகதி அமைச்சினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (National Planning Departement) Concept paper சமர்ப்பிக்கப்பட்டு அவை 26.01.2016 தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டு அதற்கான படவரைவும் அதற்கான மதிப்பீடும் (1375 மில்லியன்) 13.06.2016 இல் CECB ஆல் வரையப்பட்டு அவை 22.06.2016 இல் சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அவை இந்திய அரசினால் நிராகரிக்கப்பட்டு 275 மில்லியனுக்கான ளஅயடட development projects (SDP) திட்டமாக மாற்றப்பட்டு படவரைவு மதிப்பீடு என்பனவும் குறித்த தொகைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு 28.10.2016 இல் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன எதிர்வரும் 15.06.2017ம் திகதி இறுதி முடிவெடுப்பதற்காக Project Steering Committee meeting நடைபெற இருக்கின்றது இதன்பிறகு Technical Evaluation Committee இனால் கட்டடம் அமைப்பதற்கான விலைமனு கோரப்பட்டு கட்டட ஒப்பந்தக்காரர் தெரிரிவு செய்யப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பமாகும்.

எனவே குறித்த சத்திரசிகிச்சைக் கூடம் அமைப்பது தொடர்பாக வைத்தியசாலை நிருவாகமோ அல்லது வைத்தியசாலை பணிப்பாளரோ எந்தவிதமான ஒரு செயற்பாட்டையுமே மேற்கொள்ள முடியாது என்பதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

---

# ASWA நிறுவகம் (அஷ்ஷுப்பான் நலன்புரிச்சங்கம்)

## காத்தான்குடியில் ஆற்றிவரும் சமூகப்பணிகள்

### - ஓர்பார்வை -

2011ம் ஆண்டு முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன, மத. மொழி வேறுபாடுகளின்றி பல்வேறு சமூகப் பணிகளை மேற்படி நிறுவகம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எழுச்சிக்காகவும் அவர்களின் எதிர்கால நலன் கருதியும், பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருவதுடன் குறிப்பாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல திட்டங்களை இவ் அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. இன்னும் எமது சமூகத்தில் குறிப்பாக இளைஞர் யுவதிகள் மத்தியில் தற்போது காணப்படும் பாரிய மன உளச்சல்கள் மற்றும் தேவையற்ற உயிர் இழப்புக்களை கருத்தில் கொண்டு இதற்கான தீர்வுகளை பெறும் நோக்குடன் அவர்களுக்கு வாரா வாரம் ஆத்மீக ரீதியான கருத்தரங்குகளை நடாத்தி பொறாமை, வஞ்சகம் போன்ற கெட்ட குணங்களை விட்டும் அன்பு, கருணை, நட்பு, விட்டுக்கொடுப்பு பெரியோர்களை மதித்தல், போன்ற நல்ல குணங்களை போதிப்பதுடன் அவர்களுக்கான சிறந்த தொழில் வழிகாட்டுதல்களையும் செய்து வருவதுடன் பெண்கள் சிறுவர்கள் தற்கால உலகில் காணப்படும் சவால்களை வெல்வதற்குரிய வழிமுறைகளையும் இவ்வமைப்பு கற்றுக்கொடுத்து வருகின்றது.

மேலும் எமது மாவட்டத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பாகவும் தொற்று நோய்கள் தொடர்பாகவும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

சகோதர இனத்தையுடைய மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களுக்கான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து பரஸ்பரம் புரிந்துணர்வு ஒற்றுமைகளை ஏற்படுத்தக் கூடிய வழிவகைகளை இந் நிறுவகம் செய்ய தவறவில்லை.

மாவட்டத்திற்கே அடையாளமாகவுள்ள கலை, கலாச்சார நிகழ்வுகளுக்கு அனுசரனை வழங்குவதனூடாகவும் அவ்நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களை ஊக்கப்படுத்து வதனூடாகவும் மாவட்டத்திற்குரிய கலைகள் அழியாவண்ணம் இவ் அமைப்பினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு பாரிய நோய்களினால் பாதிக்கப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு நிதியுதவிகள் வழங்குவதுடன் மரணங்கள் ஏற்படும் போது அவர்களுக்கு [illegible] நிதி உதவிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

சமூகத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 1000 பெண்களை 17 குழுக்களாகவும், 500 இளைஞர்களை 09 குழுக்களாகவும் உருவாக்கியுள்ளதுடன் சிறுவர்களையும் 20 குழுக்களாக உருவாக்கி அவர்களுக்குரிய திறன் விருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது. இன்னும் இந் நிறுவகம் அனர்த்தங்களின் போதான உதவிகள், இரத்த தானம், சிரமதானம், போன்ற சமூக சேவைகளை மேற்கொள்வதுடன் எதிர்காலத்திலும் மேற்கூறிய அனைத்து திட்டங்களையும் தொடராக நடைமுறைப்படுத்தவுள்ளதுடன் சமூகத்திற்கு அவ்வப் போது தேவைப்படுகின்ற தேவைகளையும் அடையாளம் கண்டு அவைகளுக்கான திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திட்ட முகாமையாளர்**
**ASWA நிறுவகம்**
**இல 84/A, BJM வீதி காத்தான்குடி-06**
**Web: aswasl.org**
**Mail: aswaslorg@gmail.com**
**Tel: 0652059744, 0777637656, 0766805363**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம சத்துணவும் சிறுவர்களின் உடல்நலமும் தொடர்ச்சி...

கை கால் விறைப்பு எரிவு நோ ஏற்படலாம்.
சத்துணவு : சிவப்பு தீட்டாத அரிசிச்சோறு, தவிடு தயமின் குளிசை

3. விற்றமின் பீ 12 (ஏவையஅமை டீ12) சத்துக்குறைபாடு உடம்பு வெளிறி இரத்தச் சோகையும் உடம்பு பலவீனம், கை கால் விறைப்பு எரிவு நோ, மறதி மாறாட்டம் (ஊழகெரளைழெ) முடி உதிர்தல் நரைத்தல்
சத்துணவு : ஈரல், பச்சை மரக்கறிகள், விற்றமின் பீ12 ஊசி குளிசை

4. விற்றமின் சி குறைபாடு நோய் ஸ்கேவி இவர்களுக்கு முரசு கரைந்து இரத்தக்கசிவு, பலவீனம், உடம்புநோ, தோலில் இரத்தம் கசிதல், புண் மாறாமலிருப்பது போன்றவை ஏற்படலாம். எல்லாக்கடும் நோய்களி லிருந்து குணமடைவதற்கு விற்றமின் சி முக்கியமானதா கவுள்ளது.
சத்துணவு : தோடம்பழம், எலுமிச்சம் பழம், எல்லாப் பழங்களும், விற்றமின் சி குளிசைகள் நெல்லிக்கனி

5. விற்றமின் டி (எவையஅமை னு ஹநகளைஉநைெஉல) குறைபாடு குழந்தைகளுக்கு றிக்கற்ஸ் (சுஉைமநவள) ஏற்படுகின்றது குழந்தைகளுக்கு கால்கள் வளைவது, முழுங்கால் முட்டுதல் தாமதித்து நடப்பது, வளர்ச்சி குறைதல், உடம்பு நோ உடம்பு பலவீனம் ஏற்படலாம். வயதுவந்தவர்களுக்கு ஒஸ்ரியோ மலேசியா, (ழுளவநழஅயடயளயை) ஏற்படலாம். இவர்களுக்கு எலும்பு நோ,தொடைஎலும்பு முறிவு, உடம் பவீனம், முதுகுவலி, க்'டமாக நடப்பது போன்றவை ஏற்படலாம்.
சத்துணவுகள் : மீன் எண்ணைக் குளிசை, விற்றமின் டி குளிசை, வெய்யிலில் இருத்தல் (ளரெ டியவா)

6. இரும்புச்சத்துக் குறைபாடு (ஐசழெ னுநகைஉநைெஉல)
இவர்களுக்கு உடம்பு வெளிறி இரத்தச் சோகை, உடம்புப் பலவீனம், கை கால் உளைவு ஏற்படுகின்றன.
சத்துணவுகள் : பச்சையிலை, மரக்கறிகள், இறைச்சி, இரும்புச்சத்துக் குளிசை

7. கல்சீயம் சத்துக்குறைபாடு (ஊடைஉரைஅ னுநகைஉநைெஉல)
இவர்களுக்கு உடம்புப் பலவீனம், உடம்பு வலி, கை கால் விறைப்பு குத்து,வலிப்பு ஏற்படலாம்.
சத்துணவுகள் : பாலுடன் சேர்த்து மீன் எண்ணைக் குளிசை கல்சியமும் விற்றமின் டியும் சேர்ந்த குளிசை

எல்லா விற்றமின்களுக்கும் கனியுப்புக்களுக்கும் சேர்ந்த சம சத்துணவுகளைக் கிரமமாகச் சாப்பிட்டு வந்தால் ஒரு ஆரோக்கியமான உடல் வளர்ச்சியை ஏற்படுத்தலாம். இதனால் வளர்ந்துவரும் குழந்தைகளுக்குத் தேவையான ஞாபக சக்தியையும் உடம்பின் செயல்பாடுகளையும் வலுவூட்டலாம்.

புகைத்தலும் மதுபானமும் உடம்பிற்குத் தீங்கு விளைவிப்பதனால் இவற்றை எல்லாரும் முற்றாகத் தவிர்த்து உடல் நலத்தைப் பேணவேண்டும்.

இதற்கு மாறாக அளவுக்கு அதிகமான கொழுப்புச் சாப்பாடு, அதிக உப்பு, சீனி போன்றவற்றை சாப்பிட்டு வந்தால் உடம்பு பெருத்து நிறை கூடி அதன் செயல்பாடுகளும் குறைந்து சலரோகம், அதிக இரத்தக் கொழுப்பு, அதிக இரத்த அமுக்கம், இருதய நோய் மாரடைப்பு புற்று நோய் போன்ற நோய்கள் இளம் வயதிலேயே ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது.

சம சத்துணவுகளை உட்கொண்டு பிள்ளைகள் அனைவரும் ஒவ்வொரு நாளும் தேகாப்பியாசம் செய்து வந்தால் மூளைக்குப் புத்துணர்சி ஏற்பட்டு ஞாபகசக்தியையும் உடம்பையும் வலுவூட்டி அவர்கள் கல்வியிலும் தேகாரோக்கியத்திலும் முன்னேறிவரலாம்.

சமையலறையையும் சமையல் பாத்திரங்களையும் சுத்தமாக சுகாதாரமுறைப்படி பேணிவந்து, நல்ல தரமுள்ள அரிசி மரக்கறிவகைகளை வாங்கி தேவைக்கேற்ப உணவுகளை ஒவ்வொரு நாளும் சுகாதாரமுறைப்படி தயாரித்து பரிமாறினால் உணவுகளால் பரவும் தொற்று நோய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

பிள்ளைகளை நன்றாகப் பேணி வளர்ப்பது பெற்றோர்களுக்கே ஒரு கஷ்டமான காரியமாகும். அப்படியிருந்தும் சிறுவர் இல்லங்களின் பாதுகாவலர்களும் கடமை உணர்ச்சியுடன் அதிகம் சிரமப்பட்டு சேவைபுரிந்து வருகிறார்கள். இவர்களை நாங்கள் எல்லோரும் பாராட்ட வேண்டும்.

சிறுவர் துஸ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக இயங்கிவரும் சிறுவர் இல்லங்களின் பாதுகாவலர்களும் பேணி வளர்பவர்களும் அங்கே அன்புடன் விரும்பிக் கடமைபுரிந்து சிறுவர்களின் பெற்றோர்களைப் போல் பாசத்துடனும் கருணையுடனும் சிறுவர்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

அநாதரவற்ற பிள்ளைகளின் நலன் கருதி அவர்களைப் பேணி வளர்ப்பதும் ஆதரவளிப்பதும் ஒரு மனிதநேய சேவையாகும். எல்லா வயதினர்களுக்கும் ஏற்றதாக அமையும்.

• • •

# ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில்

## ஆகம விதிப்படியான பூஜை திருவிழாக்களுக்கு அப்பால் செய்யப்படும்


# சமூகப் பணிகள்







1. தினமும் பூஜைக்கு அப்பால் அடியார்களுக்கும், பணியாளர்களுக்குமாக "பிக்க்ஷா" அமைப்பின் மூலம் நித்திய சாத்வீக உணவு வழங்கி வருகிறோம்.
2. பாடசாலைகளுக்கு அதாவது மட்/ மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்/ விபுலானந்தபுரம் வித்தியாலயம், மட்/ சவுக்கடி பாரதி வித்தியாலயங்களில் தரம் ஒன்றில் பயிலும் மாணவர்களுக்கு அங்கர் பால் வழங்கப்படுகின்றது.
3. தரம் இரண்டிலிருந்து தரம் பதினொன்றில் பயிலும் மாணவர்களுக்கான பரத நாட்டிய வகுப்பு தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் வாரத்தில் இருமுறை இலவசமாக கற்பித்து கொடுக்கப்படுகிறது. இதில் 28 மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.
4. ஆண்டு இரண்டிலிருந்து ஆண்டு பதினொன்றில் பயிலும் மாணவர்களுக்கான தேவார, திருவாசக பண்ணணிசை பயிற்சி வகுப்புக்கள் தேவஸ்தான மண்டபத்தில் இலவசமாக கற்பித்து கொடுக்கப்படுகிறது. வாரத்தில் இருமுறை நடைபெறுகிறது.



5. வாரம் ஒரு முறை சனிக்கிழமை காலையில் சனாதன தர்ம வாழ்க்கைக் கற்கை நெறி எனும் தலைப்பில் ராம்நகர், கருணாலய இல்ல மாணவர்களுக்கும், மயிலம்பாவெளி மாணவர்களுக்கும் கற்பிக்கப்படுகிறது.
6. ராம்நகர், கருணாலய இல்ல மாணவர்களுக்கு மிருதங்க கற்கை இலவசமாக கற்றுக் கொடுக்கப்படுகின்றது.
7. ஆண்டு ஆறிலிருந்து உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கான கணணி வகுப்பு பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.
8. தேவஸ்தானத்திற்கு வரும் மற்றும் சுற்றுவட்டார மணவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை கல்வி கற்கை உபகரணம், அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
9. தேவஸ்தானத்தில் பிரத்தியேக வகுப்பிற்கு செல்வதற்கு முடியாத மாணவர்களுக்கு மாதா மாதம் புலமைபரிசில் பணம் கொடுக்கப்பட்டு வருகின்றது.
10. புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக விசேட வகுப்பும் நடாத்தப்பட்டு வருகின்றது.
11. இங்கு பணியாற்றும் தொழிலாளர்களின் நலனோம்பு செயற்பாடாக வீடு திருத்தம், வைத்திய செலவு மற்றும் பல உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.
12. வறுமைக் கோட்டுக்குக் கீழ் தேவஸ்தானத்திற்கு வரும் அடியவர்களின் குடும்பத்தில் திருமணம் செய்தற்கு அவர்களுக்கான தாலி ஒரு சவரின், கூறை, வேட்டி, மாலை புரோகித ஏற்பாடு போன்றன தேவஸ்தானத்தில் செய்து கொடுக்கப்படும்.
13. "நிவேதன" அமைப்பின் ஊடாக சிறு கைத்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பயிற்று வித்து மாலை கட்டுதல், தானியவகை பொதியிடல், தையல் பயிற்சி, சிற்றூண்டி தயாரித்து ஊதியம் வழங்கி வருகின்றோம். என ஆலய நிருவாகத்தினர் தெரிவித்தனர்.

• • •

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையின் தெடர்ச்சி...

....துன்பியல் ஊடாக திணிக்கின்றனர். பாடசாலையின் குறியீடாக 5ம் தரபுலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு காணப்படுவதனால் குறுகிய கால துரித "அறிவுத் திணிப்பும்" பாடசாலைக்கிடையில் போட்டியும் நிகழ்கின்றது. மேலும் மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களாலும் பரீட்சை "சடங்கின் கைதியாக பிடித்து வைத்திருக்கின்ற நிலையும் உண்டு. இவற்றையெல்லாம் நோக்கும் போது கல்வி அதன் குறிக்கோளில் இருந்து விலகிச் செல்கின்ற நிலையையே காட்டுகின்றது.

இவற்றையும் விட முக்கியமாக 5ம் தரபுலமைப் பரிசில் பரீட்சையின் 1ம் வினாத்தாளின் எதிர்பார்க்கை அடைவுகளைப் பெறுவதற்கு மொழித் திறன்கள் அவசியமாகும். ஏனெனில் மொழி என்பது கருத்துக்களினதும், ஒலிகளினதும் ஒழுங்கமைப்பாகும் மொழி சிந்தனையின் பிரதான கருவியாகும் எதனைச் சிந்திப்பதாக இருந்தாலும் பேசுவதானாலும் மொழி அவசியமானதாகும். ஆனால் 5ம் தர மாணாக்கர்களை பொறுத்தவரை இதற்கும் அப்பால் எண்ணக்கருக்களைப் பெறவும். கொள்கைகளில் நின்று முடிவுகளை உய்த்தறியவும் விதிகளை நன்கு அறியவும் மொழி அவசியப்படுகின்றது. பிரச்சினைகளை விடுவித்து, தர்க்கித்து, கிரகித்து செயற்படுவதற்கு மொழி முக்கியமானது இவ்விடயங்களை 1ம் வினாத்தாளில் அடைவைப் பெறுவதற்கு அவசியமாகின்றது.


ஆசிரியர்கள் திறன்களை தாங்களாகவே மீண்டும், மீண்டும் தயாரித்து பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை இனங்கண்டு, மீள வலியுறுத்தி, மாணவர்கள் தாமாகவே இலகுவில் விளங்கிக் கொள்ளும் திறனை அதிகரிக்கும் நுட்பத்துடன் அவர்களது சுமையை இறக்கி வைக்கும் நோக்குடனேயே செயற்பட வேண்டும்.

மேலும் பகுதி II என்பது பாடத்திட்டம், ஆசிரியர் கையேடு, தேர்ச்சி முதலியவற்றோடு முழுக்க முழுக்கச் சம்பந்தப்பட்டதாகும். தரம் 3,4,5 வகுப்புக்கள் உரிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அடைந்திருப்பின் எந்த மாணவனுக்கும் 70க்கு மேல் புள்ளிகளை பெறுவதில் சிறிதேனும் இடர்பாடு இருக்காது. சாதாரணமாக உரிய தேர்ச்சிகளை அடைந்திருப்பின் 100க்கு மேல் புள்ளி பெறுவது மிக இலகுவானதாகும். இது இம் மூன்று தரங்களின் ஆசிரியர்களதும், பாடசாலை முகாமைத்துவத்தினதும் கைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

எனவே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பது வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டும் செயற்படுவதல்ல பொருளாதார ரீதியாக பின்னடைந்துள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காகவும் கிராமியபுற பாடசாலை மாணவர்கள் நகர்புற முன்னனி பாடசாலையில் அனுமதி பெறுவதற்காகவுமே இப் புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது. இந் நோக்கங்களில் இருந்து விலகாதவகையில் பார்த்துக் கொள்வது அனைவரதும் கடமையாகும்.

• • •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்முனை வடக்கு கல்விக் கோட்டம்

### நடாத்திய

## கோட்ட மட்ட


# கலை விழா



மண்முனை வடக்கு கல்விக் கோட்டம் நடாத்திய கோட்ட மட்ட கலைவிழா மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.சுகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குமாகாண விவசாய நீர்ப்பாசன மீன்பிடி கால்நடை கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு விநியோக அமைச்சர் கி.துரைராஜசிங்கம் சிறப்பு அதிதிகளாக வலயக்கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன் மண்முனை வடக்கு பிரதேச செயளாளர் கே.குணநாதன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் (ஜனா) பிரதித்தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய கோட்டக்கல்விப் பணிப்பாளர் தமிழ்மொழியின் போக்கினை பற்றி தெளிவுபடுத்தினார். மொழி கலை பண்பாடு அவையிரண்டும் இரண்டறக் கலந்தவை உலகிலே ஒருதாய்க்கு நிகராக தாய்மொழி என்று அழைக்கப் படுகின்றது. எங்களது மொழியும் அதனுடைய சிறப்பும் ஒரு உச்சமான உயிருக்கும் மேலான சொத்தாக இருக்கின்றது. எங்களுடைய கலையையும் நாங்கள் இரண்டு இதயங்களாகவும் இதயத்தின் இரண்டு அறைகளாகவும் பார்க்கின்றோம் இந்த வேளையிலே எங்களுடைய உணவுமுறை உடை கட்டிடக்கலை கலைவடிவங்கள் மொழி இசை பண்பாடு கோலங்கள் அடையாளங்கள் என்பவைதான் எங்களுடைய இனத்தின் இருப்பாகும். அந்த இருப்புக்கு ஓர் அடிநாதம் எங்களுடைய கலையும் மொழியுமாகும். எனவேதான் நாங்கள் எங்களுடைய மொழியையும் கலையையும் அதன் வடிவத்தையும் படிமத்தையும் மெல்லமெல்ல கைவிட்டு செல்வோமோ என்ற ஒரு அச்சநிலை தோன்றியிருப்பதை நாம் அறிவோம் குறிப்பாக எங்களுடைய இளம் தலைமுறையினர் எங்களுடைய பண்பாடு கலாசாரம் மொழிதொடர்பாக அவர்களிடம் இருக்கின்ற மனப்பதிவு சற்றுவித்தியாசமானது. அது வித்தியாசமான போக்கிலே மேலத்தேய நாகரீகம் கொண்டதாக காணப்படுவது. துரதிஸ்டமாகும் நாங்கள் எங்களது மொழியை செம்மொழியாக கண்டாலும் கூட யுனஸ்கோ 1990 அறிக்கை அதன்பின்னர் வந்த யுனஸ்கோ இரண்டாவது அறிக்கையின் படி எங்களது தமிழ் மொழி மெல்லமெல்ல சாகின்றது என்பதனை










அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. யுனஸ்கோ அறிக்கை மாத்திரமல்ல மலேசியாவிலுள்ள தமிழ்பேரறிஞர்கள் மாநாட்டில் கூட அவர்கள் இந்த தமிழ்மொழியை ஆராய்ந்து அவை எமது வழக்கெழுத்துபோல அதுவும் ஒன்றாக மாறுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றது தமிழ்மொழி என்ற ஆராய்ச்சியையும் முன்வைத் திருக்கிறார்கள் இவற்றையெல்லாம் பார்க்கின்ற போது நாங்கள் எங்களது மொழியையும் பண்பாட்டையும் காப்பா ற்றுவதற்காக இந்த இளம் சந்ததியினருக்கு கலக்க வேண்டியது. எங்களது முதுசமாகும் அதனை நோக்கமாகக் கொண்டுதான் இந்த கலை பண்பாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிக்கையானது தமிழ் ஓசை நிறுவனத்தினரால் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில் ஆகஸ்ட் மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.